
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1012

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

34

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# ‘பத்ரி நாராயணன்’ - இயக்கமாய் ஒரு தனி மனிதன்!

‘ஒரு தனிமனிதன் வீழ்த்தப்பட்டால் அவர்களின் உடல் இயக்கம் மட்டும்தான் நின்று போகுமே தவிர, அவர்களின் சித்தாந்தம் வீழ்ந்துவிடாது. சிந்தனையாளர்களுக்கு அவர்களின் இறப்பு என்பது ஒருகாலும் மறைவாகாது’ என்பதற்கு திராவிட இயக்கத்தில் நூற்றுக்கணக்கான உதாரணங்கள் உள்ளன. அதில் தலைநகர் சென்னையின் ஓர் உதாரணம் ‘பத்ரி நாராயணன்’.

2004-ஆம் ஆண்டு நாடாளு மன்றத் தேர்தல் களம் அனல் பறந்து கொண்டிருந்தது. ‘மதமாற்றத் தடைச்சட்டம்’, ‘ஆடு - கோழி பலியிட தடை’ என ஆர்.எஸ்.எஸ். அரசாகவே மாறியிருந்த அ.தி.மு.க.வைத் தோற்கடிக்க ஓரணியில் திரண்டிருந்தன தமிழ்நாட்டின் முற்போக்கு சக்திகள். சென்னையில் ஏப்ரல் 26-ஆம் தேதியில் இருந்து, தி.மு.க. கூட்டணியை ஆதரித்து தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தது பெரியார் திராவிடர் கழகம். ஏப்ரல் 30-ஆம் நாள் காலையில் வட சென்னையில் தேர்தல் பிரச்சாரத்தில் பங்கேற்றுவிட்டு, வீடு திரும்பிய பத்ரி நாராயணன் மாலையில், வி.எம்.தெருவைச் சேர்ந்த பெரியாரிய தொண்டர் சு.பிரகாஷ்-சுமதி இணையரின் திருமண நிகழ்ச்சிக்காக மோட்டார் சைக்கிளில் புறப்பட்டார். அடுத்த தெருவான ஸ்ரீராம் நகருக்குள் நுழைந்தபோது, ஆள் நடமாட்டம் இல்லாத அந்தப் பகுதியில் வைத்து, பத்ரி நாராயணனை வெட்டிப் படுகொலை செய்தது ஒரு கும்பல். அரசியல் பிரமுகர்கள் மட்டுமில்லாமல், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சாரை சாரையாக திரண்டு கண்ணீர் மல்க பத்ரி நாராயணனின் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றனர்.



சென்னை ராயப்பேட்டையில் உள்ள வி.எம்.தெரு என்றால் பெரியார் சிலையும், அங்கு குடியிருக்கும் நூற்றுக்கணக்கான கருப்பு சட்டைக்காரர்களும்தான் இன்றைய அடையாளம். ஆனால், 30 ஆண்டுகளுக்கு முன்பு வி.எம்.தெரு என்றாலே ரவுடியிசமும், சமூக விரோதச் செயல்களும்தான் எல்லோர் நினைவுக்கும் வரும். கல்வியில் ஈடுபாடில்லாமல், போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையாகி நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தங்கள் வாழ்வை சீரழித்துக் கொண்டிருந்தனர். அவர்களை நல்வழிப்படுத்தி, அப்பகுதி மக்களுக்குப் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஆனால், அப்பணியைச் செய்ததோ பத்ரி நாராயணன் என்ற ஓர் இயக்கம். ஆம், பத்ரி நாராயணன் தனிமனிதராக அல்ல, திராவிட இயக்க சீர்திருத்தச் சிந்தனையின் இயக்கமாகத்தான் இருந்தார்.

அந்த இயக்கத்தின் மூச்சு நின்றுவிட்டதே என்ற அதிர்ச்சிதான் ஆயிரக்கணக்கானோர் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்த காரணமாக இருந்தது. மூச்சு நிற்கும், இயக்கம் நிற்குமா? கசங்கிய லுங்கி, கருப்புச் சட்டை, தாடி மறைத்த முகம் என்ற பத்ரி நாராயணனின் அடையாளம் அவர் மறைந்து 21 ஆண்டுகள் ஆகியிருந்தாலும், வி.எம்.தெரு மக்களுக்கு இன்னமும் அப்படியே நினைவில் நிற்கிறது. மயிலாப்பூர் இடுகாட்டில் உள்ள அவரது நினைவிடத்தில் ஏப்ரல் 30-ஆம் நாள், கருப்புச் சட்டை சகிதமாக இன்னமும் ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கானோர் திரண்டு அவரை எண்ணி கண்ணீர் வடிக்கின்றனர். பாகுபாடு இல்லாமல் எல்லா கட்சியினரும் இப்போதும் அஞ்சலி செலுத்த வருகிறார்கள் என்பதும் கூடுதல் ஆச்சரியம்.

சராசரி மனிதர் என்றால் மறைந்து, 21 ஆண்டுகள் ஆன பின்னர் குடும்பத்தினரே மறந்திருப்பார்கள். ஆனால், பத்ரி நாராயணனை அப்பகுதியில் வாழும் சாமானிய மக்கள்கூட இன்னும் மறக்கவில்லை என்றால், வாழ்ந்த காலத்தில் அவர் செய்த பணிகள் என்ன? அதனால் வி.எம்.தெருவில் நிகழ்ந்த மாற்றங்கள் என்ன?

தேடுவோம் அந்த வரலாற்றை....

...பயணிப்போம்.



## தமிழ்ச் சமூகம் திரளட்டும்!

எழுதியும் பேசியும் வளர்ந்த பேரியக்கம், திராவிட முன்னேற்றக் கழகம். அரசியல், பண்பாடு இரண்டையும் ஒருசேர மக்கள் மயப்படுத்திய கட்சி என்றால், அது தி.மு.க. மட்டும்தான். இந்தியாவிலேயே முதல் மாநிலக் கட்சியாக ஆட்சியமைத்த வரலாற்றைப் படைத்து, பவள விழா கடந்து, நூற்றாண்டை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. அந்த வரலாற்றை, இன்றைய தலைமுறை அறிந்துகொள்ள கழக இளைஞர் அணி சார்பில், ‘தி.மு.க. 75 அறிவு திருவிழா’ என்கிற இரண்டு நாள் கருத்தரங்கம் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நாளை மற்றும் நாளை மறுநாள் நடைபெற உள்ளது (08/09.11.2025).

கழகத் தலைவர் இந்த கருத்தரங்கைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார். இரண்டு நாட்களிலும் 8 அமர்வுகளில் பல்வேறு தலைப்புகளில் கலந்துரையாடல் உரைவீச்சு நடைபெற உள்ளது.

இரண்டு நாட்கள் கருத்தரங்கம், ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ நூல் வெளியீடு, ‘முற்போக்கு புத்தகக் காட்சி’ என இளைஞர் அணியின் முன்னெடுப்புகளை ’கொள்கை விதைக்கும் பணியில் அடுத்த முயற்சி! என கழகத் தலைவர் பாராட்டியிருக்கிறார். தமிழ்ச் சமூகம் திரளட்டும்! அறிவுத் திருவிழா சிறக்கட்டும்!

## ப்ளாஷ்பேக்



எம்.எஸ்.பெருமாள்



### தலைவர் கரங்களால் விருது பெற்ற தருணம்!

1975-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதத்தில் ‘அவள் ஒரு தொடர்கதை’ திரைப்படத்தின் நூறாவது நாள் விழா, திரையுலக முன்னத்தி ஏர் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. படத்தில் பணியாற்றியவர்களுக்கு கலைஞர் அவர்களின் கரங்களால் விருது வழங்கப்பட்டது. விழா மேடையில், ராஜ்கபூர், ஏவி.எம், சாவி, கண்ணதாசன், வீனஸ் கிருஷ்ணமூர்த்தி புட்டண்ணா கனகல் ஆகிய ஜாம்பவான்கள் அமர்ந்திருக்க, படத்தின் கதைக்கு நான் விருது பெற்ற தருணம்.

**- எம்.எஸ்.பெருமாள்,**
**முன்னாள் இயக்குநர்,**
**சென்னை தொலைக்காட்சி நிலையம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

84

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''

# பதவிக்குரிய மாண்பைத் துறந்த பிரதமர் !



**பீகார் மாநில சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்துக்குச் சென்ற பிரதமர் மோடி, தமிழ்நாட்டில் வேலை பார்க்கும் பீகார் மக்களை, தி.மு.க.வினர் துன்புறுத்துவதாக குற்றம்சாட்டிப் பேசியிருக்கிறாரே?**

அது வெறும் குற்றச்சாட்டல்ல. நாட்டின் உயர்ந்த பொறுப்பில் இருப்பவர் தன் பதவிக்குரிய மாண்பை மறந்து, அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கும் வன்மம். பா.ஜ.க.வும் அதன் கூட்டணிக் கட்சிகளும் ஆட்சி செய்யும் வடமாநிலங்களில் போதிய வளர்ச்சியும் வேலைவாய்ப்பும் இல்லாததால்தான், தமிழ்நாடு என்கிற வளர்ந்த-முன்னேறிய-வேலைவாய்ப்புகள் நிறைந்த மாநிலத்துக்கு பீகார் உள்ளிட்ட வடமாநிலத்தவர்கள் வருகிறார்கள். அப்படி வேலைக்காக வந்தவர்கள், தமிழ்நாட்டை ஆளும் தி.மு.க. அரசின் திட்டங்கள் மற்றும் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பு இவற்றால் இங்கேயே குடும்பத்துடன் தங்கி கல்வி, மருத்துவம் உள்ளிட்ட வசதிகளையும் பெற்று வருகிறார்கள். இதை அவர்களே ஊடகங்களுக்குப் பேட்டியாக அளித்து, பிரதமர் மோடியின் மூக்கை உடைத்திருக்கிறார்கள். ஆனாலும், மோடியோ பா.ஜ.க.வினரோ திருந்தமாட்டார்கள்.

ஒடிசா மாநில சட்டமன்றத் தேர்தலின்போது அங்குள்ள புகழ்பெற்ற ஜெகந்நாதர் கோயில் பெட்டகச் சாவியைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டு போய்விட்டார்கள் என்று அபாண்டமான குற்றச்சாட்டைச் சொன்னவர் அமித்ஷா. ஒரு மாநிலத்துக்கான தேர்தலில் இன்னொரு மாநிலத்தவர் மீது அவதூறு பரப்புவது மோடி-அமித்ஷா உள்ளிட்ட பா.ஜ.க.வினரின் தொடர் வன்மம். 2012-ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது அப்போதைய முதல்வரான இதே நரேந்திர மோடி, ‘குஜராத் தேர்தலில் ஒரு பீகாரியைக் கூட பொறுத்துக்கொள்ள மாட்டேன்’ என்று நேரடியாகவே பீகார் மாநிலத்தின் மீது வன்மத்தைக் கக்கினார்.

அதற்கு சில ஆண்டுகளுக்கு முன்தான் பீகார் சட்டமன்றத் தேர்தல் நடந்திருந்தது. இப்போது போலவே பா.ஜ.க. கூட்டணியில்தான் நிதீஷ்குமாரின் ஐக்கிய ஜனதாதளம் கட்சி இருந்தது. ஆனால், குஜராத்தில் 2001-இல் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு, பல நூறு முஸ்லிம்களைக் கொன்று குவித்த பா.ஜ.க. ஆட்சியின் முதலமைச்சர் மோடி தன் மாநிலத்துக்கு வந்தால், பீகார் முஸ்லிம்களின் வாக்குகளை இழக்க நேரிடும் என்ற பயத்தில், மோடியை பீகார் மாநில பிரச்சாரத்துக்கு வேண்டாம் என்று வெளிப்படையாகவே சொல்லிவிட்டார் நிதீஷ். அதற்காக, குஜராத் தேர்தலின்போது பீகார் மாநிலத்தவர்களையே மொத்தமாக இழிவுபடுத்திப் பேசினார் மோடி. பீகார் மாநிலத்தின் பா.ஜ.க. தலைவர்களே இதைத் தங்கள் தலைமையின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

உயர்ந்த பதவிக்கு வந்தபிறகும், மனதில் வன்மமும், சொற்களில் இழிவும் கொண்ட இப்படி ஒரு பிரதமரை இந்தியா இதுவரை கண்டதில்லை.

...வினா தொடரும்.

## கருவூலம்

### பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி!

1957-ஆம் ஆண்டு, திருமங்கலம் தொகுதியின் வேட்பாளர் மரணமடைந்துவிட்டதால், அந்தத் தொகுதி நீங்கலாக 233 தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது. தி.மு.கழகம் போட்டியிட்ட இடங்கள் 173. அதில் 138 இடங்களில் வென்று ஆட்சியைப் பிடித்தது. தான் சந்தித்த மூன்றாவது தேர்தலிலேயே ஆட்சியைப் பிடித்தது கழகம்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.